முருகப்பெருமான் துணை

**மகான் சோமாசிமாற நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.07.2022, வியாழக்கிழமை

1. கருணைக் கடலே அரங்க ராசா
   கந்தமகா குருவே ஞானதேசிகா
   பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
   பிரணவ குடில் படைத்த குருராஜா
2. அரசனே உன் பெருமை கூறி
   அகிலமதில் அருளாசி தன்னை
   வரமென சுபகிருது நள்ளி திங்கள்
   வல்லமைபட விய திகதி குருவாம்
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 12 நாள், 28.07.2022 வியாழக்கிழமை)
3. வாரமதில் சோமாசிமாற நாயனாரும்
   வழங்குவேன் உலகோர் நலம்பெற
   பாரமான தீவினை குற்றங்கள் ஒழிய
   பாதுகாப்பான சமூகமாக உலகம் மாற
4. மாறவே அரங்கமகா ஞானி காட்டும்
   மகத்துவமான சன்மார்க்க வழிகள் தன்னை
   அறமாக உலக மக்கள் ஏற்று
   அனைவரும் அரங்கன்பால் சரணடைந்து வர
5. வருகவே மக்களிடை மாற்றமும்
   வந்தடையும் ஞான பலமும் ஆக
   தர்மமெனும் கர்ம வினை போக்கும்
   தன்னார்வ தொண்டையும் செய்துவர
6. வருகவே கர்ம வினை விலகியோடும்
   வரும்காலம் உணருகின்ற ஞானபலமும்
   குருவருளாக திருவருளும் பெற்று
   குறைவிலா பெருவாழ்வு காணும்
7. காண்கவே அருள்பொருள் வளம்
   கலியுகத்தை வெல்லுகின்ற சூட்சும பலமும்
   சண்முகனார் ஆசியும் அருள் தயவும்
   சற்குருவாய் அரங்கன்வழி தொடர்பும் கூடும்
8. கூடவே ஓங்காரக் குடில் தொடர்பை
   கூட்டியே தொண்டரெனும் அடையாளமோடு
   தடையின்றி நித்திய பூஜைகளும்
   தவறாமல் தர்மங்களும் செய்து கொண்டு
9. கொண்டுமே முழுமதி காலம் தன்னில்
   குரு அரங்கனிடம் தீட்சை பெற்று
   தொண்டு செய்து தொடர்ந்து வர
   தேசிகனின் சீடரெனும் அடையாளத்தோடு

10. அடையாளத்துடன் ஞானிகளாகும் வாய்ப்பு
அகிலத்தார் அவரவரும் கண்டுமே
தடையற உலகை மாற்றுகின்ற
தவதர்ம பலத்தோடு ஞானிகளாக

11. ஆகவே மாற்றம் கண்டு உலகோர்
அரங்கன்வழி ஞானிகள் ஆவர் சடுதி
வகைபட ஞான ஆட்சி காலமாகி
வையகம் ஞான ஆட்சிதனை அடையும்
அருளாசி முற்றும் முற்றே

–சுபம்–